drop-outs. I was with him. He selected 3 villages for this work. He said that he had discussed with the District Collector and prepared proposals. He told me that he would send the proposals to the State Government. May I know whether the Government have received a copy of the proposals?

THE HON. THIRU S. MADHAVAN : It is an information to the Government.

கோவை மாவட்டத்தில் பின்தங்கியவர்களுக்கு தொழில் பயிற்சி

*271 வினா—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் பின்தங்கியவர்களுக்காக தொழில் பயிற்சிக் கூடங்கள் ஏதேனும் அரசு அமைத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. இ. ராமசாமி : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் பின்தங்கிய மக்கள் நிறையபேர் படித்துவிட்டு வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க தொழில் பயிற்சிக் கூடங்களை ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிற்பயிற்சிக் கூடங்களிலே படித்துவிட்டுத்தான் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அம்மாதிரி தொழிற் பயிற்சிக் கூடங்கள் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திருச்சி மாவட்டத்தில் கனிவளங்கள்

*272 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் கனிவளங்கள் உள்ளன என்று ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளனர் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஓர் அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில், கடலூர் பகுதியில் புதிய ரக கனிவளம் கிடைப்பதாக ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அதை விரைவுபடுத்தி, அந்தப் பகுதியில் ஒரு சிறு தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட தகவல் வருமானால் பரிசீலிக்கப்படும்.

அலுமினியம் தொழிற்சாலை

*273 வினா—திரு. துரைமுருகன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் துறையிலோ அன்றி பொதுத்துறையிலோ அலுமினிய தொழிற்சாலை தமிழ்நாட்டில் அமைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

@ 171-173-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.